**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 257/2015

நாள்: 22.04.2026

பெயர்: ராதாகிருஷ்ணன் (வா.சா.1) த/பெ: துரையப்பன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**6 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...**

1. வா.சா.ஆ.1 ல் நான்கெல்லையில் சர்வே எண் 67/1 ல் 2 ஏக்கர் 49 செண்டில் வீதிக்கு தெற்கே, லெட்சுமண படையாட்சி மனைக்கு கிழக்கு, காலி நத்தம் மேற்கே, குப்புசாமி நிலத்திற்கு வடக்கே என்று குறிப்பிட்டிருந்தால் சரிதான். 2 ஏக்கர் 49 செண்டில் மொத்தம் காலி நத்தமாக மாறி நிரைய நபர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கும் 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. பிரச்சனை உள்ளது. 6,7 பிரதிவாதிகளிடம் அதிகம் பிரச்சனை உள்ளது. 6 முதல் 10 பிரதிவாதிகளும் தாவா சொத்து அவர்களுடைய இடம் என பிரச்சனை செய்யவில்லை என்றால் சரிதான். அது பிள்யைார்கோவில் சொத்து என 6 முதல் 10 பிரதிவாதிகள் கட்சி செய்கிறார்கள் என்றால் சரிதான். கோவிலை சுற்றி வருவதற்கு இடம் வேண்டும் என்று சொல்லி தான் கட்சி செய்கிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து நத்தம் என்று பிரிந்ததற்கு பின்னர் எனது சொத்து என்று காண்பிப்பதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னர் தாவா சொத்தின் உரிமை என்னிடம் இல்லாத போது இந்த பரிகாரம் கேட்டது சட்டப்படி நிலைக்கத்தக்கது இல்லை என்றும் எனவே தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. நத்தம் சொத்து என்பதால் எனது பெயரில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யாத காரணத்தால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை, கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. சர்வே எண் 67/1 என்பது சர்வே எண் 67/27 என்று மாற்றப்பட்டுள்ளது

என்பதை தொடர்ச்சியாக காண்பிப்பதற்கு எனது தரப்பில் ஆவணங்கள் தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா பெயரில் உள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

ஒப்பம்/–ராதாகிருஷ்ணன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/–S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்